[1979 பிப்ரவரி 23

தஞ்சை மாவட்டத்தில் வழங்கப்பெற்ற உழவு மாடுகள்.

*வினா எண். 150—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

1977–78-ல் தஞ்சை மாவட்டத்தில் அரிசன விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் உழவு மாடுகள் வழங்கப்பட்டதா?

மாண்மிபுகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஆம்

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மானியம் வழங்கப்படுகிறது என்று கூறினார்கள். அய்.ஆர்.டி.பி. மூலமாக வழங்கப்படுகின்ற மாடுகளுக்கு மட்டும் தான் மானியம் வழங்கப்படுவதாக கூறப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வழங்கப்படுகின்ற மாட்டிற்கும் மானியம் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலுள்ள நன்னிலம் வட்டம், கும்பகோணம் வட்டம், சீர்காழி வட்டம் ஆகிய மூன்று வட்டங்களில் 19 நபர்களுக்கு அரசாங்கம் மானியமாக மாடுகள் வழங்கி இருக்கின்றது. அரசாங்கம் தான் வழங்குகின்றதே தவிர கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக வழங்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தஞ்சை மாவட்டம் பற்றிய கேள்வி. எனவே தஞ்சை மாவட்ட உறுப்பினர்கள் கேட்டால் போதும்.

திரு. மா. மணிமாறன் : கூட்டுறவுச் சங்கங்கள் ஹரிஜனங்களுக்கு கறவை மாடுகள் வாங்குவதற்கு கடன் வழங்குகிறார்கள், அப்படி வாங்கப்படுகிற மாடுகளுக்கு அரசு மானியம் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மூலக் கேள்வி உழவு மாடுகள் பற்றியது, ஆனால் உறுப்பினர் அவர்களின் துணைக் கேள்வி கறவை மாடுகளைப் பற்றிக் கேட்கிறார்கள், கறவை மாடுகளுக்கு அரசாங்கம் மானியம் வழங்கிக் கொண்டிருக்கிறது.

திரு, இரெ, இராசமாணிக்கம் : ஹரிஜன விவசாயிகளுக்கு முந்தைய அரசு இனாமாக உழவு மாடுகளை வழங்கி வந்தது. அந்தத் திட்டம் இப்போது அமலில் இருக்கிறதா ? சென்ற ஆண்டு உழவுமாடுகள் ஹரிஜன விவசாயிகளுக்கு எவ்வளவு இனாமாக வழங்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

1979 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : திட்டம் எங்கேயும் போய்விடவில்லை, இருந்துகொண்டிருக்கிறது, தஞ்சை மாவட்டத்தில் 19 நபர்களுக்கு கடந்தாண்டு வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. பொ. உத்திராபதி : ஹரிஜன விவசாயிகளுக்கு உழவு மாடுகள் கொடுக்கிறபேரால் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை மூன்று தாலுக்காக்களுக்கு மனுக்கள் போடப்பட்டு குலுக்குச் சீட்டு மூலம் குலுக்கியெடுப்பதன் மூலம் கொடுக்கிறார்களே தவிர, இப்படிப்பார்க்கிறபோது தஞ்சை மாவட்டத்தைச் சுற்றிவர இரண்டு ஆண்டுகளாகின்றன. ஆகவே, குலுக்குச் சீட்டு இல்லாமல் ஏழை ஹரிஜன விவசாயிகளுக்கு அரசாங்கமே நேரடியாக மனுக்களைப் பரிசீலனை செய்து உழவுமாடுகள் வழங்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கிடைக்கிற நிதியை வைத்துக்கொண்டுதான் இந்தப் பணியை இத்துறை செய்யவேண்டியிருக்கிறது. இதை மாற்றியமைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கடன் திட்டத்தையும் புகுத்தலாமா என்று இந்தத் துறை தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது,

திரு. அ. செல்லப்பா : தஞ்சை மாவட்டத்தில் ஹரிஜன விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் பாபனாசம் வட்டம் தவிர பிற வட்டங்களுக்கு அளிப்பதாகச் சொல்கிறார்கள் அமைச்சர் அவர்கள் பதிலில். வலங்கைமான் தொகுதியில் பாபனாசம் வட்டம்தான் தாழ்த்தப்பட்ட தொகுதி. அப்படி இருக்க ஏழை ஹரிஜன மக்கள் வலங்கைமான் தொகுதியில் அதிகமாயிருப்பதால் பாபனாசம் வட்டத்திற்கும் மானியம் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஒவ்வொரு ஆண்டும் இரண்டு மூன்று வட்டங்களை எடுத்து உழவுமாடுகள் வழங்குகிற பணியை அரசு செய்துகொண்டிருக்கிறது, பாபனாசம் வட்டம் இதுவரையில் இடம்பெறவில்லையென்றால் அது வருங்காலத்தில் நிச்சயம் இடம் பெறும்.

திரு. செ. இராமலிங்கம் : கடந்த இரண்டாண்டுகளாகத் தஞ்சை மாவட்டம் புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு கும்பகோணம், மாயூரம், பாபனாசம், சீர்காழி தாலுக்காக்களில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருந்தும் அரசு ஊழியர்களுக்கு கிடைத்து வருகிற சலுகைகள், பிற தொழில் செய்கிறவர்கள், பிற தொழில்களில் இருப்பவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள் விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை, எனவே இந்த மானியத்தை உயர்த்தி விவசாயிகளுக்கு வழங்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மானியத்தை உயர்த்துவதற்கு தற்போது வழியில்லை. இருந்தாலும் மற்ற விவசாயிகளுக்கும் உதவுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்,

காட்பாடி-சித்தூர் சாலை இரயில்வே மேம்பாலம்,

*வினா எண் 151—திரு. எஸ், ஜே. இராமசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள காட்பாடி-சித்தூர் போகும் சாலையில் இரயில்வே மேம்பாலம் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அம்மேம்பாலம் எப்போது பழுது பார்க்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்,

(ஆ) இம்மேம்பாலத்தினை திரும்பக் கட்டும் பணி தென் பிராந்திய இரயில்வேயின் அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் எடுத்துக்கொள்ளப்படும்.

கோமுகி ஆற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண் 152—திரு. வ. துலுக்காணம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தாலுகா தியாகதுருகம் அருகில் நெடுஞ்சாலையில் கோமுகி நதியின் குறுக்கே உள்ள பாலத்தை நிரந்தர போக்குவரத்துக்கு ஏற்ப சீரமைக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

திரு. வ. துலுக்காணம் : தியாகதுருகம் அருகில் நெடுஞ்சாலையில் கோமுகி நதியின் குறுக்கே உள்ள அந்தப் பாலம் ஒவ்வொரு ஆண்டும் வெள்ளம் வரும்போது அந்தப் பாலத்திற்கு பக்கத்திலுள்ள மண் சாலையில் அரிப்பு ஏற்பட்டு ஒரு மாத காலத்திற்கு மேலாக போக்குவரத்திற்கு தடை ஏற்பட்டு இருந்தது, வெள்ளம் வரும்போது அந்தப் பாலத்தில் போக்குவரத்து செல்ல முடிவதில்லை, மக்கள் செல்ல முடிவதில்லை, அந்தப் பாலம் வெள்ளையன் காலத்தில் கட்டப்பட்டது. தற்போது அந்தப் பாலம் மிக மோசமானதொரு நிலையில் இருக்கிறது. வெள்ளம் வரும்போது அங்கு போக்குவரத்துத் தடை ஏற்படுகிறது. ஆகவே போக்குவரத்து வசதியை ஏற்படுத்த நிரந்தரமான முறையில் அங்கு ஒரு புதிய பாலத்தை அமைத்துத் தர அரசு முன்வருமா?